# சைதை சா. துரைசாமியின் மனிதநேயம்
# ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதானசாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 044 - 2435 8373, 2433 0095
Email:manidhanaeyam@gmail.com Website: www.mntfreeias.com


## 2021-22 குடிமையியல் தேர்வில் (Civil Services Exam) மனிதநேயத்தில் பயின்ற மாணவ-மாணவியர் வெற்றி!

## கோயம்புத்தூரை சேர்ந்த T. ஸ்வாதிஸ்ரீ என்ற மாணவி, அகில இந்திய அளவில் 42-வது இடமும், தமிழக அளவில் முதலிடமும் பெற்றுள்ளார்.

நாள் : 30.05.2022

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு “மனிதநேய அறக்கட்டளை” தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது. இந்த அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்படும் சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகத்தில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற பல மாணவ – மாணவியர்கள் அரசுப் பணி பெற்றுள்ளனர்.

“மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்” மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த 14 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐஎப்.எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II, IIA (DC, DSP, DRO, DEO, CTO), SUB-INSPECTOR, A.E (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL, ELECTRICAL) போன்ற பதவிகளுக்கும் இதுவரை 3601க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பணியாளர் ஆண்டுதோறும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ் மற்றும் பிற மத்திய அரசு பணிகளுக்கான தேர்வினை நடத்தி வருகிறது. முதல்நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்முக தேர்வு ஆகிய மூன்று நிலைகளை கொண்டது இந்த தேர்வு ஆகும்.

அந்த வகையில், 2021-ம் ஆண்டுக்காக மொத்தம் 712 காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, 04.03..2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இருந்து தகுதியுள்ள மாணவ, மாணவிகள் மனிதநேய இலவச பயிற்சி மையத்தில் சேர்க்கப்பட்டனர். பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

இவர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் முற்றிலும் இலவசமாக செய்து கொடுக்கப்பட்டன.

1. மாணவ, மாணவிகள் தங்குவதற்காக அனைத்து அடிப்படை வசதிகளுடன் முழுபாதுகாப்புடன் கூடிய தனித்தனி விடுதிகள்.

...2

2. ஆரோக்கியமான, தரமான உணவு மற்றும் குடிநீர் வசதி
3. சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு முழுநேர பயிற்சி வகுப்புகள்
4. பல்வேறு தலைப்புகளில் பாடக் குறிப்புகள்
5. வாராந்திர மாதிரி தேர்வுகள்
6. போட்டித் தேர்வுகள் சம்பந்தமாக பல்வேறு தலைப்புகளில் ஏராளமான புத்தகங்கள் மற்றும் அமர்ந்து படிப்பதற்காக நூலகம்.
7. தமிழ் மற்றும் ஆங்கில தினசரி பத்திரிகைகள், பொது அறிவு சம்பந்தப்பட்ட வாராந்திர, மாதாந்திர புத்தகங்கள்.
8. அனைத்து மாணவ, மாணவிகளின் திறன்மேம்பாடு குறித்து நேரடி கவனம்.

கொரோனா காலத்தில் நேரடி வகுப்புகள் நடைபெறாத காரணத்தினால், இந்தியாவிலேயே முதல் முயற்சியாக, பொதிகை தொலைக்காட்சி வாயிலாக, அனைத்து தரப்பு மாணவர்களும் பயன்பெறும் வகையில் காணொலி வகுப்பாக தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த ஆண்டு 10.10.2021 அக்டோபர் மாதம் முதல்நிலைத் தேர்வு நடைபெற்றது. இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையங்களில் லட்சக்கணக்கான மாணவ, மாணவிகள் தேர்வு எழுதினர். இந்த முதல்நிலை தேர்வின் முடிவு 30.10.2021 அன்று வெளியிடப்பட்டது.

முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று அடுத்த நிலையான முதன்மை தேர்வில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மனிதநேய இலவச பயிற்சி மையம் மூலம் கீழ்க்கண்ட வசதிகள் முற்றிலும் இலவசமாக செய்து தரப்பட்டன.

1. கொரானோ காரணமாக நேரடி வகுப்புகள் நடைபெறவில்லை. அதற்கு பதிலாக மாணவர்களுக்கு தேவையான அறிவுரைகளும், பாடத்திட்டங்களும் மனிதநேயம் சார்பில் அளிக்கப்பட்டது.
2. மேலும், மாணவர்களுக்கு நூலக வசதியும் செய்து தரப்பட்டது.
3. தேர்வுகள் நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களுக்கு சென்று வர வாகன வசதி மற்றும் குடிநீர், சத்தான மதிய உணவு ஆகியவை வழங்கப்பட்டது.

ஜனவரி 7, 8, 9 மற்றும் 15, 16 ஆகிய தேதிகளில் நடைபெற்ற முதன்மை தேர்வின் முடிவு 2022 மார்ச் மாதம் 17-ந் தேதி வெளியிடப்பட்டது.

முதன்மை தேர்வில் வெற்றி பெற்ற பதிவு செய்த அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் இறுதித் தேர்வான நேர்முகத் தேர்வு டெல்லியில் உள்ள மத்திய பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் ஏப்ரல் மாதம் 14-ந் தேதி முதல் மே மாதம் 24-ஆம் தேதி வரை நடைபெற்றது.

1. பல்வேறு துறைகளை சார்ந்த முன்னாள் IAS, IPS, IRS, IAAS, உளவியல் பயிற்சியாளர்கள் மற்றும் பத்திரிகைத் துறைகளில் சிறந்த பயிற்றுநர்கள் மூலம் தினந்தோறும் இணையதளம் வழியாக, மாதிரி நேர்முக தேர்வுகள் நடத்தப்பட்டது.
2. பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமப்புற மாணவர்களுக்கு நேர்முகத் தேர்விற்கு பயணப்படி வழங்கப்பட்டது.
3. குறிப்புகள், கையேடுகள் மற்றும் தினசரி வகுப்புகள்.

...3

4. தேர்வர்களுக்கு தனிப்பட்ட வழிகாட்டுதல்.

5. நேர்முகத் தேர்வில் பங்கு பெறுபவர்கள் டெல்லி சென்று வருவதற்கு விமான பயணச்சீட்டு.

6. புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்கும், உணவிற்கும் ஏற்பாடு செய்து தரப்பட்டது.

7. மாணவர்களுக்கு தரமான காலணிகள், கோட் சூட் மற்றும் மாணவிகளுக்கு புடவை, சுடிதார், காலணிகள் என அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

மேற்சொன்ன அனைத்து வசதிகளும் மனிதநேய இலவச கல்வி மையத்தின் சார்பில் மாணவர்களுக்கு இலவசமாக செய்து தரப்பட்டன.

இந்நிலையில், டெல்லியில் நடைபெற்ற நேர்முகத்தேர்வின் முடிவுகள் 30.05.2022 அன்று வெளியிடப்பட்டது. இதில் மனிதநேய மையத்தில் பயிற்சி பெற்று நேர்முகத்தேர்வில் கலந்து கொண்ட மாணவ-மாணவியர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

குறிப்பாக, கோயம்புத்தூரை சேர்ந்த T. ஸ்வாதிஸ்ரீ என்ற மாணவி அகில இந்திய அளவில் 42-வது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பிடித்து, சாதனை படைத்துள்ளார். இவர் கடந்த 2020 ஆண்டு, 126வது இடத்தை பிடித்து ஐஆர்எஸ் பதவி பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், தஞ்சாவூரை சேர்ந்த S. சிவராமன் என்ற மாணவர் 363-வது இடத்தையும், கோயம்புத்தூரை சேர்ந்த S. மதிவாணன் என்ற மாணவர் 400-வது இடத்தையும், புதுக்கோட்டையை சேர்ந்த B. கோபிகிருஷ்ணா என்ற மாணவர் 491-வது இடத்தையும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர் என்ற செய்தியை, மனிதநேய அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

>>>>>>>>>>>>>>>>>>>> <<<<<<<<<<<<<<<<<<



*2020-21 - மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (UPSC) நடத்திய தேர்வில் 42வது இடமும், தமிழக அளவில் முதலிடமும் பெற்ற செல்வி. ஸ்வாதி ஸ்ரீ அவர்கள் மனிதநேய அறக்கட்டளை தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்களிடம் வாழ்த்து பெற்றார்.*